
www.padippakam.com

# தேடல்



வசந்தத்தின் இடிமுழக்கம்- 1, 2, 4

திசம்பர், 2000

படிப்பகம்

www.padippakam.com

# Comrade SARJONO

## இளந்தோழனை இழந்தோம்

அன்பு ததும்பும் பார்வையும்
ஆரவாரமற்ற பேச்சும்
அழகெழுதும் புன்னகையும்
உனது கருவிகள்.

தோழனே—
அன்றொரு நாள்
ஊர் ஓய்ந்திருந்த இரவில்
விவாதம் வீட்டின் வரவேற்பறையில்
அன்புப் பாட்டி அமர்ந்துவிட
அக்காவையும் அத்தையையும்
கர்த்தர் கைவிட்டுவிட்ட நேரம்
விடையின்றி விழித்தார்கள்
தோழர்கள் வென்றோம்
என்று மகிழ்ந்தவனே!

சீறிப்பாய்ந்த உன்
வினாக் கணைகள்- தேடலின்
தேவை உணர்த்தின
உன்னுடன் ஊர்சுற்ற வேண்டும்
என்ற என் வேட்கையை
புன்முறுவலோடு ஏற்றாய்

காலம் காத்திருக்கவில்லை
உறுதிமொழியை இல்லாதொழித்தது
**Sarjono**வே
உனது பண்பும் நீ
காட்டிய அன்பும்
நினைவுகளாய் என்றும்
எம்மோடு....

படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும்

# தேடல்

ஆசிரியர்:
ஸ்டாலீ போகூ

தென்கிழக்காசிய வெளியீடு

வசந்தத்தின்
இடிமுழக்கம்-1, 2, 4
டிசம்பர், 2000

## ஆசிரிய உரை

சிலர்சொல்லுவதும் மிகப்பலர் நம்புவதும்போல் பொருளாதார சமத்துவம் மட்டுமே பேசும் சித்தாந்தமல்ல மார்க்சியம்! அஃதொரு சமநெறி கூறும், உழைப்பவர்க்கு மட்டுமே உலகு சொந்தமென்று போர்ப்பரணி பாடும் வாழ்விலக்கியம்.

கதையின் பேரால் அருவருப்பையும் கேளிக்கையின் பேரில் விபச்சாரத்தையும் ஊக்கப்படுத்தும் விளம்பரங்கள் தாங்கிய இதழ்கள் புற்றீசல்போல் நாளும் வெளிவருகின்றன. உழைக்கும் மக்களுக்கு எதிரான மூளைச்சலவை செய்யக் கூடிய கருத்தாக்கங்களைத் தாங்கிவரும் ஏடுகளைத் தடைசெய்யாத அரசுகள் சுரண்டப்படும் மக்களின் உரிமைக்குக் குரல் கொடுக்கும், அவர்களின் நலன் காக்கும் ஏடுகளுக்கும், இலக்கியங்களுக்கும் தடை விதிப்பது என்பது மக்களின் அறியாமையால் ஏற்பட்ட விளைவு என்றால் மிகையாகாது.

ஆனாலும், இத்தகு நிலைக்கான எல்லாக் குறைபாடுகளையும் மக்கள் தலையிலேயே சுமத்துவது, நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதற்கு ஒப்பானது. மாறாய், மனிதத்திரளின் அறிவுத் தெளிவிற்கு இதுநாள்வரை நாம் ஆற்றிய பணிகள் எந்த அளவு?

படிப்பகம்

www.padippakam.com



அடித்தட்டு மக்களுக்கு விழிப்புணர்வு எற்படுத்துவதில் தவறி, சுணங்கிவிட்ட நாம் அவர்களைத் திட்டித் தீர்ப்பதில் எந்த மத அதிகாரிக்கும் பின் தங்கிவிடவில்லை.

அடிப்படை வருமானம் என்று வரையறுப்பது முதலீட்டாளர் களைக் கவர்வதில் தோல்வி ஏற்படுத்தும் என்றும், அதிக ஊதிய உயர்வையும் போனசு போன்றவற்றையும் எதிர்பார்க்க வேண்டா மென்றும், மாறாய் பொருளாதார மீட்சியடைய முதலாளிகளோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தும் முதலாளிய முட்டுத் தாங்கிகள். ஒவ்வொரு நாளும் அன்றாடங் காய்ச்சிகளான மக் கள் குடிசைகளில் எதிர்கொள்ளும் இன்னல்கள் மிகப்பல. இவற்றை அறிந்து தீர்வு காண்பதற்கு நேரமின்றி, வானுயரக் கோபுரங்கள் எழுப்புவதில் தனிக் கவனம் செலுத்தும் அமைச்சர்கள். உலகமய மாக்கம் நாடாளுமன்றங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம் படுத்தும் என்று எதிர்பார்க்கும் அவைத் தலைவர்கள். குடிமக்க ளின் அடிப்படை உரிமைகளைக்கூடக் கட்டுப்படுத்தி, ‘எங்களது நாடும் அரசியலும் நிலைத்தன்மை கொண்டவை. எனவே உங்க ளுக்கு எந்தவிதமான தொல்லைகளும் நேரிடாது’ என்று உறுதி வழங்கி, சலுகைகள் பலவற்றை அறிவித்து, இரத்தம் உறிஞ்சி, முத லீட்டார்களுக்கு இரத்தினக் கம்பளம் விரிக்கும் அமைச்சரவைத் தலைவர்கள்.

இவ்வாறான அரசியல்வாதிகளைத்தான் தலைவர்களாய் ஏற் றுக் கொண்டுள்ளோம்.

பள்ளிக் குழந்தைகள்தொட்டு மூத்த குடிமக்களின் நலன்வரை பொருளாதாரம், இராணுவம் மட்டுமின்றி சுற்றுச் சூழலிலும் கவ னம் குவித்துப் பேணும் தாடிக்கார ஃபிடல் போன்ற ஒரு தலை வனைப் பெறாமல் இருப்பது நமது ஏமாளித்தன்மையால் வந்த விளைவேயன்றி வேறென்ன...!

ஒசிமின் போன்ற தகமைசால் தலைவர்கள் உருப்பெறாததற்கு காரணங்கள் பலவென்றாலும் அவற்றுள் முதன்மையானது இங்கே பயிற்றுவிக்கப்படும் கல்விமுறையே. பொருள் தேடுதற்கு மட்டுமே கல்வி என்ற எண்ணப்போக்கு முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும்.

பிடல், சே, மூத்த– இளைய கிம் என்று செயலாற்றல் மிக்க தோழர்களின் பெயரை ஓயாது முழங்கி ஆனந்தப்பட அறிந்தோமே தவிர அப்போராளிகளின் பெரும் பணிகளை விளக்கிச் சொல்ல முயன்றது உண்டா?

www.padippakam.com



இவ்வுலகை பூவுலகாக மாற்றுவது மட்டும் போதுமா? இல்லாமை, இயலாமை, கல்லாமை அல்லவா அழித்தொழிப்பு வேலைத்திட்டத்தில் முதன்மை பெற வேண்டும்?

ஏற்றத் தாழ்வற்ற சமநெறி சமுதாயம், உழைக்கும் வர்க்க சர்வாதிகாரம், அவற்றுக்கான முன் முயற்சி, பண்பாட்டுப் புரட்சி, என சோசலிச வளர்ச்சியின் இறுதிக் கட்டம் கம்யூனிச அமைப்பு. அம்மனித நேய மணங் கமழும் அமைப்பிற்கான தொடக்கம், கற்பி, ஒன்று சேர், போராடு! அத்தகைய போராட்டமும் நீண்ட பயணப் புரட்சியாய்ப் தொடரவேண்டும்.

அதோ... வானுயர கம்பந்தனில் அசைந்தாடும் செங்கொடி!

---

## மீண்டும் இதழியக்கப் பயணம்—

பாடுபடும் தொழிலாளிக்குச் சாதியில்லை; மதமில்லை நடப்பியலோ எதிர்மறையாய். நுகர்வுப் பண்பாடு இம்மக்களின் வாழ்வியலைச் சீரழித்துவிட்டது. இந்நிலையில் வாழ்வின் எல்லா நிலையினர்க்கும் வசந்தத்தின் இடிமுழக்கம்! அவர்களின் விடுதலைக்கான வழிமுறைகளை எடுத்தியம்ப வேண்டும். எல்லாவற்றையும் சந்தேகங்கொள்ளச் செய்தல் வேண்டுமென எண்ணியதன் விளைவு.

நம்மைச் சீரழித்துக்கொண்டிருக்கும் மதமும் கடவுளும் எம்முடனேயே தங்கிவிட்டதற்கான கரணியம் பகுத்தறிவின்மையே. நம்மின் இந்த மெலிவுதான் ஆளும் அரசு, நிறுவனங்களுக்கு அடித்தளமாகின்றது.

'தேடல்' உணர்வுதான் நம்மை விடுவித்துக் கொள்வதற்கான கருவி என்பதனை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

கண்களைக் குருடாக்கிக்கொண்ட டெமாக்கிரீடசுக்கும், எபிகூரசு அறிஞனும், நம் பேராசான் மார்க்சுக்கும் ஏற்பட்டதான 'தேடல்' அறிவுப்பசி நம்முள்ளும் கிளர்ந்தெழல் வேண்டும்,

காலம் பல செய்திகளைத் தேட வைத்திருக்கின்றது. அத்தேடலின் வெளிப்பாடாய்...

படிப்பகம்

www.padippakam.com

# புரிதலுக்கும் விவாதிப்புக்கும்

## ஆய்வுத்தும்பி

மகத்தான புரட்சியாளர் போல்பொட்டை, மக்கள் போரளி 'பிடலை', 'சேவை', இன்னுஞ் சொன்னால் தோழர் 'கபிலனை'– அவர்களின் போர்த்திறனை, வினையாற்றலைப் பெருமிதத்தோடு விவரிப்பதில் சிறு அளவுகூட பிரபாகரனின் சாதனைகள் பற்றிப் பேசுவதில்லை என்ற போதும் பிரபாவின் சர்வாதிகாரத்தை எப்படி ஏற்றுக்கொள்ளவும் நியாயப்படுத்தவும் முடிகின்றது என்பது போன்றதான குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் நம்மீது!......

ஏற்றுக் கொள்வதற்கும் நியாயப்படுத்துவது என்பதற்குமான சொற்களின் வேறுபாட்டை அறிந்துகொள்ள முயன்ற வேளை, நம் கைவிரல்களைக் கொண்டே நமது கண்ணைக் குத்தும் சாமர்த் தியசாலிகள் இவ்வாறு குற்றஞ் சுமத்துவோர் (மார்க்கியமும்கூட பேசும் திராவிடர்கள்) என்பதனை உய்த்துணர்ந்துகொள்ள முடிந் தது. அவர்களின் பின்னணி அதற்குப் பெரிதும் துணைபுரிந்தது.

மதத்தின் பெயரால் மானுடத்தை மறுதலிக்கும் காலிச்தானைக் (Kalistan)கூட ஆதரிக்குமிவர்கள் 'ஈழ விடுதலையை ஒருதலைச் சார்பாய் மறுதலிப்பது' ஏன்? இத்தகைய அம்மணக் கோமாளிக் கண்ணோட்டக்காரர்களின் மூட முகத்திரையைக் கிழிக்கத்தான் வேண்டும்.

உலக வாழ்க்கைக்கென தவுளி ஆவா புத்தன் கற்பித்த எண் வகை தூயநெறிகளையும், நான்கு பேருண்மைகளையும் மறந்தும், கவனிக்க மறுத்தும் வருகின்ற, இன்றும் வெசாந்திரர் மறைக்கப் பட்டு அநாகரிக தர்மபாலாவின் கோட்பாடுகள் முதன்மைப்படுத் தப்பட்டு, சாவை விரும்பி ஏற்கும் ''தானை ஒழி'' என்ற கோட்பாட் டிற்கு, பயங்கரவாதத்தை எதிர்த்துக் களத்தில் மடிவது என்று திரி புவாத விளக்கம் தரப்பட்டு, காவி அங்கி, மிதியடியற்ற கால்கள், பொட்டல் காடாய் மழித்த தலையோடு, திருவிலங்கை அரசிய லையே ஆளுமைசெய்து, அந்தரத்தில் அரசோச்சும் மகா நாயக்க தேரர்களாலும் சிங்களப் பித்துக் கொண்ட இனவாத அரசியல்வாதி களாலும் உங்களுக்கான விடுதலையை நீங்களே பெற்றுக் கொள் ளுங்கள் (போர்தான் தீர்வு) என்று தெள்ளத் தெளிவாய் அறிவுறுத் தப்பட்டுவிட்டபின் இத்தமிழினத்தின் ''இருத்தலுக்கான'' மாற்று வழியாய் எவை இருந்தன ஆயுதம் தாங்குவதைத் தவிர?

படிப்பகம்

www.padippakam.com



அரசு ஆவணங்களில் இனம் என்ற இடத்தில் "தமிழர் என்று குறிக்கச் சொன்னபோது "இந்தியர்" என்றே எழுதிய அலுவலர்கள், 'அவ்வாறு ஒரு தனி இனமுண்டா?' என்று புருவத்தை உயர்த்திக் கேலி பேசிய அலுவலர்கள் இன்றும் தமிழர் என்று எழுத இடர்ப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன என்றபோதும் அற்றை நாள் போல் பெருஞ்சிக்கல் இல்லையென்பதே ஆறுதலளிக்கும் செய்திதான்.

இலெனின் என்று பெயர் சூட்டப்பட்ட தன் மகனின் பிறப்பாவணத்தில் தமிழர் என்றெழுத மறுத்த அலுவலகத் தாதியிடம் வாதம் புரிந்த நம் இனிய நண்பர், இன்றும் உரைப்பார் போராளிகள் பெற்றுத் தந்த வாய்ப்பை.

தவிரவும் வெள்ளுடையில் உலா வந்துமகிழும் விசுவாச மிக்க சாம்பார் பிரியர்கள் தமிழர்கள் என்ற கருத்தில் மாற்றப் பட்டு மல்ல, தமிழர்கள் குட்டக் குட்ட குனியும் கோழைகள் அல்லர் என்ற கருதுகோளும் துளிர்விட்டு வளருவதை திரிபுவான், காட்டு நாயக்கா விமான நிலைய அலுவலர்களுடனான வாக்கு வாதத்தின் போது ஏற்பட்ட அனுபவத்தில் உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது. ஆகவே தான் மேற்சொன்ன நிலைக்கு வழிகோலிய ஈழப் போராளிகள் அனைவரும் நம் மதிப்பிற்குரியவர்கள். நாம் கையறு நிலையினர் என்ற கருத்து மீண்டும் மீண்டும் எம்மால் ஆணித்தரமாய் உரைக்கப்படுவது.

இத்தகு வாய்பேற்படுத்தித் தந்தவர்களுள் புலிப்படையினரும் அடக்கம் என்ற கரணியத்திற்காகவே அவ்வேங்கைப் போராளிகளுக்குப் பலவாறு துணைநிற்க முனைந்த காலம் ஒன்றிருந்தது. மார்க்சின் கட்டுரை ஒன்றையும் படித்திராத காலமது.

தொடர்ந்த "தேடல்" (மன்னராட்சி காலம் துவங்கி காலனித்துவ, பின்னர் ஏற்பட்ட பண்டார நாயக்கா காலம் வரையிலான அரசியல் நிகழ்வுகள்) பல மணித்தியால ஆய்வு என்றும் நிறைவுறாது, மாபெரும் இலெனின் வகுத்தளித்த பாடத்தைப் பயின்றபின்னரே அவ்வேங்கைகளின் போராட்டத்தை ஏற்க இயன்ற நிலை நம் நிலை.

சோசலிச ஈழம் என்ற முழக்கத்தோடு துவங்கியதும், புலிகள் பாதையை 'அடித்துவிட்டு ஓடும் போர்முறை' என விமர்சித்தும், 'பரந்துபட்ட மக்கள் போர்ப்பாதையே தம் வழி' என்று முழங்கியவருமான உமாமகேசுவரனின் தலைமையில் களங்கண்ட தோழர்களின் இன்றைய நிலை கண்டு வெட்கித் தலை கவிழத்தான் முடி

www.padippakam.com



கின்றது எம்மால்! ஏன்? தலைமை தாங்கிய தோழர்களின் காலத்திலேயே அந்த அரை நிர்வாண வஞ்சகக் காந்தியின் வாரிசுகளின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுத்தானே போனார்கள்.

உமாவும் சபாவும் களத்தில் நின்ற காலை பிரபாவின் தலைமையை மறுதளித்தவர்கள்தாமே இங்கு வாழும் அறிவகந்தை மிக்க சிலோனிச்சிடுகள். இருவரினும் தலைமையிலான போராட்டத்தை வேளாளத் தலைமைத் தற்காப்பிற்கான போராட்டமாகக் கண்டது தானே பிரபாவின் தலைமையை அங்கீகரிக்க மறுத்ததற்கான காரணி. அந்நிலை இன்று மாறியுள்ளது.

எந்தச் சனாதன சாதியமைப்பு காரணத்திற்காக பிரபாகரனின் தலைமை ஏற்புப் பெற தவறியதோ, அவ்வேங்கை போராளிகளால் வென்றெடுக்கப்படும் 'ஈழத்தில்'தான் வருணாசிரம தர்மம் ஓரள்வுக்கேனும் கட்டுக்குள் வைக்கப்படும் என்ற உண்மையை நாம் மறுப்பதோ மறப்பதோ ஆரோக்கியமாகாது.

பார்ப்பான் வகுத்த படிக்கட்டு சாதியடுக்கெனும் சிலந்தி வலையினுள் வாழ்வின் கூறுகளை அமைத்துக் கொண்ட ஈழமக்களுக்கு அறிவுறுத்தி, அம்மக்கள் மூலிகைத் தோட்டமாய் அமைந்துவிட புலிகளினதும் ஏனைய போராளிகளதுமான பங்களிப்புகள், திறப்பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. தன்னலம் பேணா இளஞ்செம்மல்களை வளர்த்தெடுத்து, தலைமை தந்து, செங்களமாடுபவர்தான் பிரபாகரனேயொழிய தமக்கு ஏற்பட்ட மனஅரிப்பின் பேரில் தமிழரை சாவுக்கொட்டடிக்கு அனுப்புவது போன்ற குண்டர் கும்பலின் தலைவன் அல்லன் அக்கதிர்க்கையன் என்பதனை ஒவ்வொருவரும் உணர்தல் சிறப்பாம்.

உழைக்கும் வகுப்பு விடுதலைக்கு "ஓயாத அலைகள்" வழி வகுக்குமாயின் முட்டுக்கட்டையாய் அமைவதை விட விமர்சனத் திற்குட்படுத்தி நெறிபடத் துணை நிற்கலாமே.

அடக்கி வாழ்வது இழப்பு!<br>
அடங்கி வாழ்வதோ இழுக்கு!<br>
இணைந்து வாழ்தலே சிறப்பு!

---

பண்பாட்டுப் புரட்சி ஒன்றிற்காய்ப் புறப்பட்டவர்களின்<br>
தென்கிழக்காசிய வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் தொண்டன் Dr. டேவிட்

**இனியவன்**

சிறை சென்ற உங்கள் தொண்டன் சேவைக்குத் திரும்பி விட்டேன். இனி அவன் அயரமாட்டான்.....சிறை என் உடலை அன்றி உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த முடியாது. எனது இலட்சியங்கள் மறையவில்லை; என்னுடைய எண்ணங்கள் அழியவில்லை. என் உயிருள்ள வரைக்கும் பாட்டாளித் தோழர்களுக்கு உழைக்க மார்தட்டி முன்வந்திருக்கிறேன்– என்று வேழமொன்று பிளிறியது.....! ஆம். 55 நாட்கள் நெருக்கடி காலச் சட்டத்தின் கீழ் சிறை வைத்கப்பட்டு விடுதலையானதும், 9-7-58 ஆம் நாளன்று பிரிக்பீல்ட்சு திடலில் உழைக்கும் மக்களால் வழங்கப்பட்ட இரண்டாயிரம் பேர் திரண்டிருந்த மாபெரும் வரவேற்புக் கூட்டத்தில் மக்கள் தொண்டன் டேவிட் முழங்கியவைதான் மேலே சொன்னவை.

1932 ஆகத்து 26ஆம் பக்கல் கோலாலம்பூரில் வேதமுத்து–பாக்கியமுத்து இணையர்க்குப் பிறந்த தோழர் டேவிட் தமது பத்தாம் அகவையில் தந்தையை இழந்தார். தாயின் கடும் உழைப்பினாலும், இடைவிடாத தன்முயற்சியாலும் இடைநிலைக் கல்வியை கோலாலம்பூரில் முடித்துக்கொண்டு, கல்வி உதவித்தொகை பெற்று ஐக்கிய அமெரிக்காவின் கென்டக்கி லூயிவில் கல்லூரியில் பொருளியல், அரசியல், அறிவியல் பயின்றார்.

பொதுவுடமை போராளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததோடு, கம்யூனிச அரசமைக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1958இல் கைது செய்யப்பட்டபோது கோலாலம்பூர் நகரவை உறுப்பினராகவும், பின்நாளில் தடைசெய்யப்பட்ட தேசிய ஆலைத் தொழிலாளர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் பொறுப்புவகித்தார். தோழரின் கைது பற்றிய விவரங்களை உசாவ சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று, இன பேதமின்றி அனைத்து மக்களாலும் D. ஈ. என்று அன்போடு அழைக்கப்பட்ட மக்கள் முற்போக்குக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் டி. ஆர். சீனிவாசகம் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தது வரலாறு.

ஃபங் கியோங் தொழிலக வேலை நிறுத்தம் பற்றிய நாடாளுமன்ற விவாதத்தில் மன்றத்திற்கு வெளியில் விவாதிக்க, அத்துறை

படிப்பகம்

www.padippakam.com



அமைச்சரை சவாலுக்கு அழைத்த நெஞ்சுரம் கொண்டவராவார் டேவிட்.

அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்தபோது ‘‘உடற்கூறு தத்துவப்படி மனிதனுடைய மூளைகள் எல்லாமே சமமானவை என்று விஞ்ஞானிகள் மெய்ப்பித்துள்ளனர். எனவே ஒரு இனம் மற்றதைவிட உயர்ந்தது என்று கூறுவது அறிவியலையே கேலி செய்வதாகும்’’ என்ற மேற்கோளோடு அறுபதில் ஆற்றிய நாடாளுமன்ற உரை பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

தோட்டப் பாட்டாளிகளின் மீது அவர் கொண்ட அன்பையும், தூர நோக்கையும் வெளிப்படுத்தியது, தோட்டத் துண்டாடல் பற்றிய 21-4-60 நாடாளுமன்ற உரை. இலவசக் கல்வியில் அரசுக்கு அக்கறையில்லை என்றால் உள்துறை அமைச்சருக்குத்தான் பணி அதிகம். ஏனெனில் பெரும் எண்ணிக்கையிலான சிறைகளைக் கட்ட வேண்டியிருக்கும் என்று அவையில் பேசிய தோழர் டேவிட். பின்னர் பாட்டாளி வகுப்புப் பிள்ளைகள் தொழிற்கல்வி பயில வேண்டி பண்டமாரானில் தொழிலாளர் தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவனார்.

சிலாங்கூர் சட்டமன்றத்தின் பந்தாய் தொகுதி உறுப்பினராகவும், போக்குவரத்து தொழிலாளர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றிய போது இரண்டாம் முறை கைதானார்.

1974ஆம் ஆண்டு சிவபாக்கியம் அவர்களை மணம் புரிந்தவருக்கு மகன் உண்டு.

1958இல் மக்களின் சார்பில், தொழிற்கட்சி பிரதிநிதி ஒருவரால் மக்கள் தொண்டன் என்ற பட்டமும், எழுபதுகளில் சியார்ச்சு (GeorgeTgwn) நகர் போக்குவரத்துத் தொழிலாளர்களால் (Bapa Pekerja) ‘‘தொழிலாளர் தந்தை’’ என்ற பட்டமும் பெற்றவர்க்கு கலிபோர்னியாவின் பசிபிக்வெஸ்டர்ன் பல்கலைக் கழகம் ‘அனைத்துலக உறவுகள்’ என்ற ஆய்வுக்கட்டுரைக்காக சிறப்புப் பண்டாரகர் (Dr.) பட்டத்தை எண்பதுகளில் வழங்கிச் சிறப்பித்தது.

கூட்டணி அரசின் தொடர்ந்த பழிவாங்கும் நடவடிக்கைகளால் சீர்குலைந்த தொழிற்கட்சிக்குப்பின் பல்வேறு எதிர்க்கட்சிகளில் பங்கு பற்றியதால் இவரை ஓடுகாலி என்று விமர்சித்தவர்கள் அன்றும் இன்றும் உண்டு. பாராளுமன்றப் பன்றித் தொழுவ அரசியலில் இஃதொன்றும் வியப்பிற்குரியது அல்லவே! அரசியல் குப்பையில் அர்த்தங்களைத் தேடுவது புழுத்த பிணத்தில் இதயத்து

www.padippakam.com



டிப்பை சோதிக்கிற மாதிரிதான் என்பது ஆய்ந்தறிந்த அறிஞர் கூற்று.

தியாகத்தின் நினைவாம் 'மே நாள்' பொதுவிடுமுறையாதற்கு டேவிட்டின் குரல் வகித்த பங்கினை வரலாறு வஞ்சகமின்றி உரைக்கும்.

எண்பதுகளில் சென்னையில் கூட்டப்பட்ட ஈழத் தமிழர் மாநாட்டில் கலந்துகொண்டபோதும், மலேசியாவில் தொழிலாளர் உரிமைகள் மதிக்கப்படவில்லை என்ற அறிக்கைக்காகவும் இவரின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டதும் உண்டு.

ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக வென்று பணியாற்றியவரின் குரல் ஈழத்திற்கும் புலிகளுக்கும் ஆதரவாக, அவையில் ஒலித்தது வரலாறு.

1984இல் இவர் தலைமையில் அமைக்கப்பட்ட உலகத் தமிழர் மாமன்றம் ஈழப் போராளிகள் மேல் சுமத்தப்பட்ட அவதூறுகளையும், தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அம்பலப்படுத்தியது. கடிதங்கள், அறிக்கைகள் வழியும் தெளிவுபடுத்தியது.

நாடு கடந்த அரசமைக்க மொரிசியசு நாட்டு அரசு அனுமதி வழங்கியும், அவ்வாய்ப்பைத் தவறவிட்ட தமிழர் ஐக்கிய கூட்டணியினர் மீதான இவரின் வருத்தத்தைக் கடிதங்கள் சொல்லின.

'கலைந்து செல்லுங்கள்; அன்றேல் அனைவரும் கைது செய்யப்படுவீர்கள்' என்ற காவல்துறை உயர் அலுவலரின் கடும் எச்சரிக்கையையும் மீறி தமிழினத்தவர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தும், விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கை தூதரகம் முன் மறியல் செய்தது அண்ணனின் தலைமையில் தான்- இன்றைக்கும் எழுச்சியூட்டும் அந்த நினைவுகள்.

நகர்ப்புற குடியேறிகள் பொதுக்கூட்டம், தொண்ணூறாம் ஆண்டில் (Dr.) பர்சையது உசேன் அலி, தோழர் இரசாக் அமாட், இணைப்பேராசிரியர் (Dr.) பர்சனூசி ஒச்மான், அன்றைய நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் குவா கியா சூங், வழக்கறிஞர் இராசையா, டாக்டர் அசிம் நோர் ஆகியோரும் பங்கேற்ற பெருங் கூட்டமாய் பெட்டாலிங் செயாவில் நடைபெற்றபோது நிகழ்ந்த சந்திப்பிற்குப்பின் இடைவெளி அகலப்பட்டுவிட்டது.

தோழர்கள் அமாட் போச்தமாம், தான் சீ கூன், பெ. பட்டு என்ற பெயர் வரிசையில் டேவிட் அவர்கள் மக்களுக்கும் தொழி

www.padippakam.com



லாளர் வகுப்பினர்க்கும் ஆற்றிய பணிகள், பதித்த தடயங்கள் என்றும் எவராலும் அழிக்கப்பட முடியாதவை; வரலாற்றில் நின்று நிலைபெறக்கூடியவை.

நான்கு முறை சிறை கண்டும், நான்கு முறை வாத நோயால் தாக்கப்பட்ட இன்றைய நிலையிலும் மக்களின் தொண்டனாக வாழ்வியற் செலவைத் தொடரும் தோழர் டேவிட் அவர்களின் வரலாறு இளைய தலைமுறைக்கு விரிவாய்ச் சொல்லப்படல் வேண்டும்.

தோழரின் நீண்ட நாளைய திட்டமான உலகத் தமிழர் பல்கலைக் கழகமும், உலகத் தமிழர் வங்கியும் இவரின் காலத்திலேயே உருவாகினால்தான் உண்டு.

வெல்லட்டும் டாக்டர் டேவிட்டின் நோக்கங்கள்.
உலகை ஆளட்டும் உழைக்கும் வர்க்கம்.

---

## பெண்கள்

அடிமையாய், கூண்டுப் பறவையாய்,
பள்ளியறைப் பதுமையாய்
ஒடுங்கிடும் இழிநிலை மாற்றி,
உடைமையையும் உரிமையையும்
பொதுவாக்கி,
மாந்தகுலம் உயர்வு பெற
வினை செய்; பணி செய்,
உன் பயணம் நெடிது
பாதை கடிது என்று
ஆற்றுப்படுத்தி அழைத்து வந்தது
அறிவியல் மார்க்கியம்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலை-நம் நிலைபாடு

மார்க்கியம் கதைக்கும் நீங்கள் ஈழப் போராட்டத்தை ஆதரிப்பதெப்படி என்ற மார்க்கிய அநுதாப மேதாவிகளின் வருத்தம்! தமிழ் மொழி, தமிழின வெறியுணர்வுதான் போராட்டத்தை ஆதரிப்பதற்கான காரணி என்ற திராவிட, இந்தியர்களின் குற்றச்சாட்டு! வர்க்கப்போராட்டமில்லையே, இருந்தும் ஆதரிப்பு ஏன்? என்ற நமது தோழர்களின் புரிதலுக்கான வினா! நம் நிலை தெளிவுபடுத்தத்தான்......

டி.எசு. சேனநாயக்கா துவங்கி பண்டாரநாயக்கா ஈறாய் இன்றைய சந்திரிகாவரை, அங்கே நிகழ்வதென்ன? ஓநாய்கள்தானே புத்தம் பேசுகின்றன. எத்தனையெத்தனை அடக்கு-ஒடுக்குமுறைகள்: கல்வி, பொருளாதாரமென்று வாழ்வின் எல்லாத் துறையிலும் தமிழனாய்ப் பிறந்து தொலைத்துவிட்ட ஒன்றுக்காக எவ்வளவு இழிவுகளை, கழிவுகளை சுமக்க வேண்டியிருந்தது. சிங்களப் படை தமிழச்சியின் பிறப்புறுப்பில் (பெண்குறி) வெடிகுண்டை வைத்து வெடிக்கச் செய்த இழிசெயல், வேறெங்கு கண்டோம் ஈழத்தைத் தவிர? தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சோல்லிக் கொண்ட ஓட்டுப்பெட்டி அரசியல்வாதிகள், நாடாளுமன்ற கதிரைகளுக்காக ஏங்கி சிங்கள வஞ்சகச் செயலுக்குப் பலியாகித்தான் போனார்கள். விதிவிலக்காய் எசு.சே.வி. செல்வநாயகம் போன்றோர் (வட்டுக்கோட்டை தீர்மானம்) அமைந்தார்கள் என்றாலும் விடிவில்லாமல்தானே கிடந்தது.

சிங்களக் காடயர்கள் மட்டும்தான் தமிழரை அடக்கி ஒடுக்கினார்கள் என்றில்லை. அவ்வாறு நிகழ்ந்திருப்பின் வியப்பதற்கில்லை! ஆனால் நடந்ததென்ன?

சாந்தியையும் சமாதானத்தையும் போதித்த புத்தரின் சீடர்களான பிக்குகளும் அல்லவா சேர்ந்து கொண்டார்கள்! இக்கால் தலைமை வகிப்பது மொட்டைத் தலையர்கள்தான். தேரவாத பிக்குகள் சிங்களப்பித்தர்களாகிப் போனார்கள். அதைவிட கேவலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பேசிய கம்யூனிசுடுகளும் அவர்களுக்குப் பின்தங்கவில்லை.

நாற்பதுகளில் மத்திய மாநிலத்தின் மூல்லோயா தோட்டத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில், காவல்துறையின் காட்டு விலங்

www.padippakam.com



காண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கோவிந்தன் எனும் தொழிலாளி முதல் தியாகியானார். இந்தியாவில் தலைமறைவாக இருந்த காலத்தில் அத்தொழிலாளத் தோழரின் பெயரையே தன் பெயராக வைத்துக் கொண்டவர், தனிச்சிங்களம் மட்டும் அரசமொழி என்ற மசோதாவை எதிர்த்த தனதுரையில் ''ஒரு மொழி இரு நாடுகள், அல்லது இரண்டு மொழிகள் ஒரு நாடு- இதில் எதனைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்?'' எனக்கேட்ட அதே ட்ரசுகிச்டான நமது கொல்வின் டி.சில்வாதான் சிறீமாவோ அமைச்சரவையில் உறுப்பினராகிக் கரைந்து போனார்.

அரிவாள், சம்மட்டி, செங்கொடி ஏந்தி இளைஞர்களைக் கவர்ந்த, பின்னாளில் படுகொலை செய்யப்பட்ட தோழர் உரோகன விசயவீராவும்கூட ''மசாலவடே'' சுலோகங்களை முழங்கியவர்தானே.

ஆகவேதான் பொறுத்தது போதுமென்று தமிழரினம் குட்டிமணியாய், செகனாய், தங்கத்துரையாய் கிளர்ந்தெழுந்தது. ஒட்டுமொத்தமாய், ஒரே தொகுப்பாய் குடிசையிலிருந்து குண்டு வெடித்தது, உமாவாய், சபாவாய் செல்லக்கிளியாய், பிரபாகரனாய்.

தமிழினம் தொலைத்துவிட்ட முகவரியை மீளத் தேடித்தரவல்ல தனித்துவம்மிக்க குண்டு பிரபாகரன் எனும் குண்டு என்பதனை, நாளைய வரலாறு நிச்சயம் உணர்த்தும். இனி, ஓரினம் மற்றொரு இனத்தை அடக்கியாளுதல் கூடாது என்னும் இலெனினியம்தான் நாம் கொள்ளும் வரையறை.

தீமோர் துவங்கி திபெத் வரை, குர்திசுதானிலிருந்து, அயர்லாந்து முடிய நமது நிலைப்பாடு ஒன்றே.

தமிழீழ விடுதலைப் போர் என்பது ஒடுக்கப்படுகிற உலகத் தேசிய இனங்களின் விடுதலைப் போரின் ஒரு பகுதி என்பதை உணரவேண்டுமென்பார் இன்குலாப் பாவலர். இனி எவராயிருந்தாலும் ஈழப் போராட்டத்தை விமர்சிக்கும் முன், வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டுவது தெளிவிற்குதவும். குறிப்பாய் நம் காம்ரேடுகளுக்கு.

ஆதரவு என்பதோடு நில்லாமல் நம் பங்களிப்பும் தொடரும். புலிகள் மட்டுமல்ல, சபடிசிட, துப்பாக் அமரு, ஒளிரும் பாதை, கெரன், ஈரியான் செயா விடுதலை இயக்கம் என எல்லா விடுதலை இயக்கங்களும் வெற்றி பெற்றே தீரும். அவ்விடுதலையை விரைவுபடுத்த நம் பங்களிப்பு மிகத் தேவை.

படிப்பகம்

www.padippakam.com

# அறிவு போதனை செய்வது யார்?

ஊர்சுற்றி உலகப்பன்

இமாலயப் படைப்பாளி என்ற மாயை அகற்றப்பட்டு, செயகாந்தன்களுக்கும் அவாள் நண்டுசிண்டு நத்தான் கூடு குஞ்சு குளுவான் எழுத்த(ாள)ர்களுக்குமான இடைவெளி அறிந்து கொள்ள முடியாததல்ல என்ற சூழல் ஏற்படுத்தப்பட்ட பின்பும், செயகாந்தன் என்ற சக்கையை பல்லக்கில் தூக்கித்திரியும் தெருக்கூட்டம் மலாய் தீவுக்கூட்டத்தில் இருக்கத்தான் செய்கின்றது என்பதனை அறியும் போது, கைகொட்டிச் சிரிப்பதா! அல்லது வரலாற்றைக் கற்கும் தன்மையற்றுப் பலவீனப்பட்டுப்போன இத்தகையோரின் நிலை கண்டு அனுதாபங் கொள்வதா?

இனமொழி வாழ்வுக்கும், உயர்வுக்கும் வேண்டி தங்களது வாழ்வையே உரமாக்கிய பன்னூற்றுவர் பரவை சூழ் பரதநாட்டில் உண்டென்றாலும், இங்குள்ளோர் அழைப்பதெல்லாம் செயகாந்தன் போன்ற உதிரிகளையும் வயிரமுத்து போன்ற பீராயும் நாலாந்தர திரைப்பாடலாசிரியர்களையும் மஞ்சள் துண்டு மடாதிபதி போன்ற சந்தர்ப்பவாதிகளையும்தான்.

உலகப் போரினால் ஏற்பட்ட பாதிப்பாலும், உள்நாட்டில் எழுச்சி கட்டுக்கடங்காமல் போனதின் விளைவாலும் பிரிட்டன் பேயரசு, விடுதலை என்ற பெயரில் நாவலந்தேயத்தை விட்டு நீங்கியது. அவ்வேகாதிபத்தியம் விட்டுச் சென்ற நாற்காலியில் அமர்ந்து கொண்டு தமிழர் நிலப்பரப்பு துண்டாடப்பட்டது; மாற்றுமொழித் திணிப்பு போன்ற திருப்பணிகளை நிகழ்த்திக் காட்டிய காங்கிரசு கட்சியில் உறுப்பியம் பெற்று, ஊரை அடித்து உலையில் போட்டு, குடிநீருக்கும் தத்தளிக்கும் தமிழனை, கோவணத்தோடு நடமாடவிட்டு மகிழ்ந்து அண்டைநாட்டு தலைநகரில் எண்ணெய் கிடங்குகள் பற்றியெரிந்த போது ஓடோடி உதவி நின்ற பெரும் கையூட்டுக்கரனான நரசிம்மனுக்கு சலாப்போட்டு, தரம் தாழ்ந்த செயகாந்தன் போன்றோரா நமக்கு அறிவு போதனை செய்வது?

www.padippakam.com

# வாய்மொழித் தொகுப்பு

## மறைந்தும் மணக்கும் அய்டிட்டின் பெயர்

1. மேற்கு-குழக்கு சாவா (java), பாலி, தீமோர், லொம்போக் என்று தீவுக்கூட்டமெங்கிலும் முசுலிம், கத்தோலிக்கம், விவிலியம், ஹிந்து என்று மதத்தின் பெயரால் பிரிக்கப்பட்டுள்ள பலதரப்பட்ட உழைக்கும் மக்களும் தோழர் Dipa Nusantara Aidit அவர்களின் பெரும் பணியை விரித்துரைக்கும் போதும், புகழ்ந்துரைக்கும் வேளையும் நாமும் பெருமிதங் கொள்கின்றோம்- மேற்சொன்ன மக்களில் கட்சி உறுப்பினர்களோ, மார்க்கியம் போற்றுபவர்களோ எவரும் இல்லையென்பதால்.

காரல் மார்க்சு மட்டுமே மகத்தானவர் என்ற நம் கருத்தை மேலும் ஆழப்படுத்திக் கொள்கின்றோம்- பேராசானின் கற்பித்தலின் தேவை மிகுவதால்.

—Bujang Lapok-பூச்சாங் இலாப்போக்

2. மணந்தவர் மலடி என்று சொல்லிப் பிரிந்து சென்ற பின்பும் தாயை மட்டுமே துணையாய்க் கொண்டு வாழ்ந்தவர். பிரிந்து போனவர் வேறு பெண்ணுடன் இல்லறம் துய்த்து இறுதிக் காலத்தில், இவரை நாடிவந்து வாழ்ந்து மறைந்த போதும் மறுமணம் செய்து கொள்ள மறுத்து விட்ட அறுபதை நெருங்கும் கத்தோலிக்கரின் கருத்து:

"எனக்கும் பொதுவுடமை இயக்கத்திற்கும் எவ்வகை தொடர்புமில்லை. அத்தத்துவத்தைப் பற்றிய புரிதலுமில்லை. இருப்பினும் தோழர் அய்டிட்டின் பணிகளையும் அவர் உழைக்கும் மக்கள் மேல் கொண்ட கரிசனத்தையும் எண்ணும்போது கம்யூனிசத்தின் மேல் மதிப்பு மிகுகின்றது."

3. "ஐந்து குழந்தைகளின் தந்தை தம் பிள்ளைகள் அனைவரையும் ஒன்றுபோல்தான் நடத்துவார். அதுபோல் அவர்களை எந்தக் கட்சி, கோட்பாடு கொண்டோராய் இருந்த போதிலும், தம் மக்கள் என்ற காரணத்தால் எல்லோரையும் ஒரே வகையாய் நடத்தினார்

படிப்பகம்

www.padippakam.com



என்பதுதான் மெய்யே தவிர புங்கார்னோவே ஒரு கம்யூனிச்டு என்பதெல்லாம் உண்மைக்கு புறம்பானது என்பது எம்துணிபு'' என்கிறார் அறுபதைக் கடந்த ஹிந்துவான அகோங்.

4. முதலைக் குழியில் புடைத் தளபதிகள் கொல்லப்பட்ட முறையும், தோழர் அய்டிட்டை படுகொலை செய்ய கையாண்ட முறையும் ஒன்றே. ஆகையால்தான் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற சுகார்தோ (Suharto) உள்ளிட்ட தரைப்படை அதிகாரிகள் உந்தோங் ( Untug ) தலைமையில் நடத்திய நாடகம்தான் செப்தம்பர் 30 இயக்கமேயொழிய, கட்சி நடத்திய புரட்சி அல்ல 'September 30 Movement' என்கிறேன். இதில் அமைச்சராக இருந்த அய்டிட் மீது பழி சுமத்தி, அவர் குடியரசுத் தலைவரான சுகார்னோவுக்கு(Sukarno) எழுதிய கடிதங்களைச் சேர்ப்பிக்காது புங்கார்னோவை சந்திக்க விரும்பிய அமைச்சர் அய்டிட்டையும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றுமின்றி குடியரசுத் தலைவரின் ஆதரவாளர்கள், அபிமானிகள் என்று பலநூறு ஆயிரம் மக்களைக் கொன்று குவித்து ஆட்சிப் பீடமேறியவர்கள்தான் இக்கொலைகாரர்கள் என்று குமுறுகிறார் நங்கை தீத்தா(Tita)

---

## மதமெனும் சாய்க்கடையில் விழாதிருக்க வேண்டும்

கஃப்பீர் என்று இசுலாமும்
பாவிகள் என்று விவிலியமும்
வேசிமக்கள் என்று சநாதன தர்மமும்
இழிவுபடுத்தும் மானுடத்தைத் தூக்கிப்பிடித்து
மக்களே மகத்தானவர்கள் என்று
சிறப்பிப்பதும் ஒன்றுபடுத்துவதும்
மார்க்சியமெனும் மனிதத் தத்துவம் மட்டுமே.

❋

மாந்தநேயம் போற்றும் மார்க்கியத்தை
வாழ்வியலாய்க் கொண்ட
புதியதொரு உலகின்
புலர்காலைப் பொழுதுக்காய் – தேடல்.

படிப்பகம்

www.padippakam.com

# அக்தோபர் சிந்தனை

கூட்டுப் பண்ணையின் கோதுமை மணிகள் சிலிர்த்தன. உணவும் உறைவிடமும், வாழ்வின் தேவைகளும் நிறைவு பெற்றிருந்ததால் வாழ்வதற்கு ஆர்வமிருந்தது.

ஏக்கத்தோடு எதிர்பார்த்துப் பதுங்கியிருந்த கைக்கூலிகள் சீமான்களாகிவிட்டனர் பதுக்கலின் வழி. தாலர்க்கு பெருமதிப்பு, படுவீழ்ச்சியில் ரூபிள். தவிக்கின்றது உழைக்கும் வர்க்கம்; வாழ்வதற்கே வழியில்லை. இளம்பெண்களைப் பொதுமகளிராய் வெளியுலகுக்கு ஏற்றுமதி செய்கின்ற இழிநிலை. விளாடிவாசுடாக்கில் பணிபுரியும் ஒருவர், மாதத்துக்கொருமுறை தலைநகரில் வாழும் தன் குடும்பத்தை, சென்றுகண்டு திரும்ப வானூர்தி சீட்டு அன்று; நான்கு வாரங்களுக்கொரு தலைமையமைச்சர், விரும்பியபோதெல்லாம் வெவ்வேறு ஆணைகள், அமைச்சர்கள் மாற்றம், உலக பணநிதியத்திடம் கையேந்திய வெட்கங்கெட்ட நிலையில் அரசும் ஆட்சியும், முன்னாள் வல்லரசின் இன்றைய நிலை.

வேலையின்மையற்ற, அடிப்படை பயன் பொருள் விலையேற்றமற்ற, வரிச்சுமையற்ற வாழ்வு, இவையோடு கல்வி, சுகாதாரம், வீட்டுடைமை மற்றும் பல்வேறு வகையான சமூக சேவைகள் ஏறத்தாழ எல்லாக் குடிமக்களுக்கும் இலவசமாய் அளிக்கப்பட்டன. முதலாளித்துவ சந்தைப்பொருளாதாரத்தை நம்பிமேற்சொன்ன அனைத்தையும் இழந்துவிட்டு, இருத்தலுக்கே உத்தரவாதமற்ற நிலையில் கிழக்கு அய்ரோப்பிய உழைக்கும் வர்க்கம்.

பதவிப்போராட்டம், அரை நிர்வாண அழகுப்போட்டி! குண்டுமழை பொழியும் மதவெறியின் ஆட்சி வடபுலந்தன்னில்! இன ஒழிப்பு செயற்பாடு திபெத்தில். 'மேற்கத்திய மோகத்தில் மக்கள். மக்கள் விடுதலைப் படை அரசு அலுவலர் போல்...

இருபத்து ஆண்டுக்காலப் பொருளியல் சீர்திருத்தத்தின் விளைவிது. சிவந்திருந்த சீனப் பெருநிலத்தின் இற்றை நிலை.

அடிப்படை உரிமையான மாந்தவுரிமையே மறுக்கப்பட்டுவிட்ட நிலையில் உழைக்கும் வகுப்பு ஆசிய நாடுகளில்.

அணுகுண்டு உருவாக்கத்தில் இவ்வரசுகளுக்கு இருக்கின்ற முனைப்பு மக்களுக்கான வாழ்வசதிகளைச் செய்வதில் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



மதத்தின் பெயரால் மத்திய கிழக்கு. பல்வேறு இனக்குழுக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்ற நிலை.

சர்வாதிகார ஆட்சியில் சீரழிகிற இலத்தீன் அமெரிக்கா. ஓய்ந்து விடவில்லை போராளிகள்.

முதலாளிய பெருநாடுகளின் பிடியில் சிக்கித் தவிக்கும் அழகிய ஆப்ரிக்கா!

'கருவாட்டை மீனாக்கலாம்; கறந்த பாலை மடி புகச் செய்ய லாம். அதற்கான ஒரே வழி முதலாளித்துவ சந்தைப் பொருளியல் தான்' என்ற ஏகாதிபத்திய வெள்ளை மாளிகை உலகின் அதிபதி யாய்......!

எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் தரை சிவந்த அக்தோபர் புரட்சி. பாட்டாளி வகுப்பின் அரசு மாமனிதன் இலெனின் தலை மையில். இன்று உருவகப்படுத்தித்தான் பார்க்கவியலுகிறது நம் மால்! உருவகமே நிலையானதல்ல; மீண்டும் பண்பாட்டுப் புரட்சி கள் வெடிக்கும்.

உழைக்கும் வர்க்கம் செங்களமாடும்; பூமிப்பந்தெங்கும் செங் கொடி பறக்கும்.

இவ்வுருண்டையை சிவப்பாய் மாற்ற வாருங்கள் தோழர்காள்! மீண்டும் நீண்ட பயணம் தொடருவோம்......

# ஆக்கத்திற்கான அழிப்பு

இயற்கை கேடு, சுற்றுச்சுழல் மாசு என்று அறிந்தும் காடுகள் அழிக்கப்பட்டு, நிலங்கள் பண்படுத்தப்பட்டுப் பயிரிடப்படுவது ஏன்? மனித இருத்தலுக்கான தேவை என்பது விடை.

கம்போடியா போன்ற நாடுகளின் சமுதாய அமைப்பென்பது நிலப்பிரபுத்துவ அமைப்பைப் போன்றதும், மன்னரை வணங்கி வழிபடுவதுமானதுமாகும். அறிவுச்சலவை செய்யப்பட்டுவிட்ட ஓர்

படிப்பகம்

www.padippakam.com



சமூக அமைப்பில் உழைக்கும் வர்க்க ஆட்சியமைப்பு என்பது எவ்வகையில் இயலக்கூடியது என்று எண்ணியதின் விளைவுதான், ''செங்கெமர்'' (கெமர்ரூச்) இயக்கத்தினரால் தோழர் பொல்பொட் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பண்பாட்டுப் புரட்சி. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பிற்கான முதற்கட்டப் பணியது. ஆக்கத்திற்கான அழிப்பு என்ற வகையில் எதிர்த்தோர், வஞ்சித்தோர் கொல்லப்பட்டிருப்பர்.

உடலுழைப்பை மட்டுமே உடைமையாய்க் கொண்ட மாந்தக் கூட்டத்தினரின் நல, வள வாழ்வுக்கான அத்தகைய முன்னெடுப்பு தவறு என்றால், அத்தவற்றை நாம் தொடர்ந்து செய்வோம். நூறு ஆண்டுகள் என்ன, ஆயிரம் ஆண்டுகள் தூக்கிலே தொங்கி விட்டுப் போகிறோம். கவலையில்லை. வரலாறு நம்மை விடுதலை செய்யும்.

—மக்கள் போராளி பொல்பொட் இரங்கல் கூட்டத் தலைமையுரையில் தோழர் விளாடிமிர்.

---

# போகோர் கலந்துரைடாட்ல்...

## பூச்சாங் இலாப்போக்

சோவியத் ஒன்றியத்தின் உதவி வேண்டியே, கியூபா, மார்க்கிய-இலெனினிய நெறியைப் பின்பற்றும் நாடு என்று பிடல் பிரகடனம் செய்தார் என்பதெல்லாம் வஞ்சகத் தன்மை கொண்டதும், இழிவானதுமாகும்.

இவ்வாறு பரப்புரை செய்த வட அமெரிக்க அரசும் அவ்வரசின் உளவாளிகளும், காசுட்ரோவின், அவர்தம் தோழர்களின் இளமைக் கால அரசியல் நடவடிக்கைகளை அறியாதவர்கள் அல்லர்.

தம்மின் உற்ற நண்பன் பட்டிசுடா ( Batista ) தூக்கியெறியப்பட்டதையும், பிடல் சொல்வாரே வட அமெரிக்க மூக்கின் கீழ்

www.padippakam.com



வெற்றி பெற்ற சோசலிசப் புரட்சி என்று, அம்மக்கள் எழுச்சி தமக்கு அருகிலேயே உழவர் புரட்சியாய் வெற்றி பெற்றதையும் சகித்துக் கொள்ள இயலாத வக்கிர புத்திதான் அவ்வாறெல்லாம் பரப்பல் செய்ததற்கு அடிப்படை என்பது வெள்ளிடை மலை.

இன்னும், கியூபாவை சோவியத் சார்பு நாடாக்கியது, கொள்ளைக்கார அமெரிக்காவும் அதன் அடிவருடி நாடுகளும்தான் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்தோ, தொமினிக் (Dominic) குடியரசிலிருந்தோ தாக்குதல் மேற்கொள்ளப்படல் கூடும் எனக் கருதிய தோழர் பிடல் படைத்துறையை மேலும் பலப்படுத்த வேண்டி மேற்குலக நாடுக்ளை அணுகியபோது, இத்தாலியைத் தவிர ஏனைய நாடுகள் யாவும் அகங்கார அமெரிக்காவின் சினத்திற்கு ஆளாக நேரிடும் என்று அஞ்சி உதவிட மறுத்தன. இத்தாலியும் பின்னர் அந்நிலைப்பாட்டையே மேற்கொண்டது. பெல்ச்சியமும் செக் குடியரசும் அவ்வப்போது உதவின.

என்றென்றும் நம் மதிப்பிற்குரிய மார்சல் தோழர் டிட்டோவும்கூட உதவ மறுத்தார் என்பதனையும் உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகு நிலையில்தான் அறுபதாம் ஆண்டு மே மாதத்தில் Bapak சுக்கார்னோ கியூபாவிற்கு வருகையளித்தார். புரட்சிக்குப் பிந்திய கியூபாவிற்கு வருகை தந்த முதலாவது வெளிநாட்டு அரசுத் தலைவர் அவராவார்.

புத்துலகம் அமைக்க விழைந்த போராளிகள் அவதூறுக்குள்ளாக்கப்பட்டார்கள். அண்டை நாடுகளின் தொல்லைகள் தவிர்க்கப்பட்டிருந்தால் சோவியத் சார்பு என்ற நிலை ஏற்பட்டிருக்காது என்பது மட்டுமல்ல, "பாட்டாளி வகுப்பு வல்லாளுமை ஆட்சி" என்பதற்கு முன்னுதாரணமாய் கோசலிச கியூபா திகழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. ●

★

கல்லைக் கும்பிட்ட கைகள் மனிதரை
வணங்குவதை நினைத்தால்
நன்றிப் பெருக்கில் கண்ணீர் வடியும்
மார்க்சு என்றே வாய் உரைக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# வினாவுக்கான விடைகள்

## சிவப்பு கொடி நூலில்—

**தமிழர் விழித்துக்கொள்ளப் பெரும்பங்காற்றியது மார்க்கியமா? பெரியாரியமா?**

உழைக்கும் வர்க்க விடுதலைக்கும் ஏற்றத் தாழ்வற்ற சமூக அமைப்புக்கும் மார்க்கியமே வழிகோலும். பெரியார் பிறவாதிருந்தால் தமிழரினம் நாகரிகமற்ற இனமாய்த்தான் வாழ்ந்திருக்கும் என்பது தமிழர் வரலாற்றுப் பக்கங்கள் கூறும் உண்மை.

சிவப்பு சட்டைக்காரர்களால் தமிழர் அடைந்த நன்மையைக் காட்டிலும், பெரியாரின் போராட்டத்தால் பெற்றதே அதிகம். இதற்கான காரணம் செங்கொடி நூலில் தொங்கிக் கொண்டிருப்பதுதான் தோழர்!

## அமைப்பை மாற்ற வேண்டும்

**உலகம் இன்னும் அழகாய் இருப்பது எதனால்?**

இனம், மதம் கடந்த நிலையில், உழைக்கும் மக்களின் நல்வாழ்வு வேண்டி தங்கள் வாழ்வை அர்ப்பணித்து விடுகின்றவர்கள் போராளிகளாய் வினையாற்றிக் கொண்டிருப்பதால்.

**நாத்திகரா நீங்கள்?**

வேதத்தை நிந்திப்பவன் நாத்திகன் என்று சொல்லும் சனாதன வர்ணாசிரம தர்மம். அவ்வேதத்துக்கு ஆதாரமான எங்கும் வியாபித்திருக்கும், பரிசுத்த பிதாவான அல்லாவையும், குருட்டு நம்பிக்கையில் சொல்லப்படும் படைட்டுக் கொள்கையையும் மறுதலித்துவிட்ட இயக்கவியல் பொருள் முதல்வாதி.

**பல்வகையான கம்யூனிசுடு கட்சிகள் இருந்தும் புரட்சி வரவில்லையே இந்தியாவில்?**

படிப்பகம்

www.padippakam.com



உழைக்கும் மக்களின் ஆற்றலை வீணடிப்பதும், அவர்களுக்கு விதி, மறுபிறப்பு, கியாமத் என்று கற்பித்து மூளைச் சலவை செய்வதுமான மத நிறுவனங்கள், உழைக்கும் வயல்வெளி மக்களை ஒன்றுபடவிடாமல் தடுக்கும் படிக்கட்டுச் சாதித் தத்துவம் இவற்றோடு பாட்டாளி வகுப்பை ஒன்று திரட்டி, புரட்சிக்குத் தலைமை தாங்க வேண்டிய சம்மட்டி, அரிவாள்கட்சிகள் முதலாளிய நாடாளுமன்ற சகதிக்குள் வீழ்ந்ததும், பாட்டாளி வர்க்க சர்வதிகாரம் பேசியோர் ஒட்டுப்பெட்டி அரசியல்வாதிகள் ஆனதும் காரணமாம்.

**கெமர்ரூச் தலைவரைக் கசாப்புக்கடைக்காரர் என்கிறார்களே?**

மனித மதிப்பீடுகள் மரணித்துவிட்ட மயான கலாச்சாரத்தை அங்கீகரித்துவிட்ட இந்த அமைப்பில், மக்களின் நல்வாழ்வு வேண்டி தங்கள் வாழ்வையே தியாகித்து விடுகின்றவர்களுக்கு, உழைத்து ஓடான மக்களின் உழைப்பை உறிஞ்சி, தம் வாழ்வை வளமாக்கிக் கொள்கின்றவர்கள் (கள்ளர்களும் கொலைகாரர்களும்) சூட்டுகின்ற பெயர். இதற்கு ஏடுகளும் பக்கத்துணை.

தம்மைச் சுற்றி நிகழ்வதைக்கூட அறிந்துகொள்ளும் ஆர்வமற்றவர்களாக உழைக்கும் வர்க்க மக்கள் ஆக்கப்பட்டுவிட்டார்கள். கேளிக்கை, குடும்பம் என்ற பெயரால் மக்களின் அறிவு மழுங்கடிக்கப்பட்டு, சிந்தனையாற்றல் சுரண்டப்பட்டுவிட்ட நிலையில் எங்கே போய் முட்டிக்கொள்வது. நமக்கிருக்கின்ற ஒரேயொரு வழி இம் மக்கள் திரளை போர்க்குணமுடையவர்களாக மாற்றியமைப்பது தான். பிரெஞ்சு புரட்சி அக்தோபர் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி என்று தொடர வேண்டும் நெடும் பயணமாய்.

## செப்தெம்பரும் திசம்பரும்

தன்மானமிழந்து/ தாழ்ந்துகிடந்தவனை/ தட்டியெழுப்பி
தன்னுணர்வூட்டி/ தரமுள்ளவனாய்/ தலைநிமிரச் செய்த
ஏந்தல், வெண்தாடிக் கிழவனின் பிறந்த நாள்: 17-9-1879.

மூத்திரச் சட்டியுடன் சுற்றியலைந்து, மலினப்பட்டுப் போன மாந்தக் கூட்டத்தின் அறியாமையையும் இழிவையும் போக்கிய தொண்டுக் கிழவன்- கருப்பு மெழுகுவர்த்தியின் நினைவு நாள்: 24-12-1973.

www.padippakam.com

## இன்றைய செய்தி நாளைய வரலாறு

## தோழர் பொல் பொட் இரங்கல் கூட்டம்

கெமர்ரூச் இயக்கவரலாறு தோழரின் வாழ்வும், வினைப்பாடும் என்ற அளவில் மட்டும் அமையாமல், உலக விடுதலை இயக்கங்கள், ஏகாதிபத்தியம் குறித்து கதைக்கப்பட்டது.

கெமர்ரூச் மீதான சீனாவின் இறுதிக் கால நிலைப்பாடு விமர்சனத்திற்குள்ளானது.

தோழர் பொல்பொட் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் பொய் என்பதனை அறிக்கை பரப்புரையாய் உலகுக்குச் சொல்லவேண்டுமெனக் கருத்துரைக்கப்பட்டது.

இளந்தோழர்களின் பங்கேற்பு ''நாளைய உலகுக்கு சமவுடைமை, சமவுரிமை பூமி'' என்பதனை ஆழப்படுத்தியது. ●

---

## ஐயய்யோ சாமி!

நடந்து முடிந்த தமிழாசிரியர்கள் கருத்தரங்கில் ''தமிழ்ப்பள்ளிகளைப் பற்றி மற்ற எவரையும் விட எனக்கு அதிகமாகத் தெரியும். ஆகவே வெளியாரின் பேச்சைக் கேட்க வேண்டாம்'' என்றும் இதுநாள் வரை தாம் 345 தமிழ்ப் பள்ளிகளுக்குச் சென்றிருப்பதாகவும் வாய்ப்பந்தல் போட்டிருக்கின்றார் சவடால் தலைவர் ச. சாமிவேலு. அன்று தொட்டு இன்றுவரை எதை மறந்தாலும், இத்தகைய தன்மூப்பான உண்மைக்கு மாறான உளறல்களை உதிர்க்கத் தவறுவதே இல்லை.

'கொத்துமல்லிப் பூக்களாய், கொஞ்சுதமிழ்ப் பாக்களாய் வாழி வாழி பூமிமேல் -டத்தோ எங்கள் சாமிவேல்' என்று உரத்த குரலெடுத்துப்பாடியவர்களும் மயக்கம் கலைந்து உலக மாமனிதரின் (!) முகமூடியைக் கிழிக்கத் தயார் ஆகி வரும் வேளையிது.

படிப்பகம்

www.padippakam.com



பிறப்புச் சான்றிதழில் இந்தியர் என்றும் சீனரென்றும் எழுதுவது முறையற்றது என்று சிந்திக்கத் தலைப்பட்டுவிட்ட இளைய தலைமுறையின் காலமிது என்பதனை சோதனை தலைவருக்கு எவராவது விளக்கப்படுத்துங்களேன் ...!

'போதும் நிறுத்து!'

—சென்ட்ரல் மார்க்கெட் கலந்துரையாடலில்— ஊர்சுற்றி உலகப்பன்

---

# எல்லாம் மாறும்

தொன்னூறுகளின் முற்கூறில் சாவா தீவில் சுற்றியபோழ்து புங்கார்னோ இறப்பு குறித்து சில பல அய்யப்பாடுகளை எழுப்பியும் சூப்பர் செமார் என்றழைக்கப்படும் சுகார்தோவின் அரசை விமர்சித்ததும் உண்டு. அதுபோது எம் கருத்தை ஆதரித்தவர்களில் பெரும்பான்மையினர் தடை செய்யப்பட்ட பொதுவுடைமை (பிகேஅய்) கட்சிக்கு ஏதோ ஒருவகையில் தொடர்புடையவர்களும், மேகவதி சுகார்னோ புத்திரி தலைமையிலான சனநாயக கட்சியினரும்தான்.

தொன்னூறுகளின் பிற்கூறில் எமது பயணம். மெல்லக் கொல்லும் அல்லது ஊசியின் மூலம் நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்டார் நாட்டுத் தந்தை என்ற குற்றச்சாட்டுகளோடு பல்வேறு வெளியீடுகள். கடைகள், சாலையோரங்கள் என மறைத்துவைக்கப்பட்டிருந்த புங்கரர்னோவின் படங்கள் வீட்டு வரவேற்பறைகளில். அவருடைய படங்கள்தாம் பெரிய அளவில் விற்பனையாகின்றன என அறிந்து கொள்ள முடிந்தது விற்பனையாளர்களை நேர்கண்டதில்.

கோல்கார் கட்சி சாம்ராச்யம் கவிழும் பட்சத்தில் இன்னும் பல்வகைப்பட்ட மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிவரும் என்பது உறுதி.

—பூசாங் இலாபோக்

படிப்பகம்

www.padippakam.com

# உலகப் புகழ்பெற்ற அகதி

இருள் கிழித்து ஒளிபரப்பும் கதிரவனாய், உழைக்கும் மக்களின் அடிமைவிலங்கு அறுபட, இருளை விரட்ட கரைந்துபோகும் மெழுகு வர்த்திபோல் தம்மையே ஈகித்துக்கொண்ட பெருந்தகை. உலகம் நம்மைக் கண்டு பயப்படுகிறது என்றவர், அறிவியல் தந்நல மகிழ்ச் சிக்குரியதாக இருக்கக் கூடாது என்றார். மனிதகுலத்துக்காகப் பணி புரிக என்பது அவர் விரும்பி பகர்ந்தவை. எல்லாவற்றையும் சந்தேகப்படு என்றவர்க்குப் பிடித்த மூதுரை ''மனிதனுக்குரிய அனைத்தும் எனக்கும் உரியன!'' என்பதே. உலகப் புகழ்பெற்ற அகதியான பேராசான் கார்ல் மார்க்சின் பெயரைக் கேட்டு அவர் மறைந்து நூறாண்டு கடந்தும் மக்கள் விரோத அரசுகள் நடுங்கு கின்றன...

என்று தொடங்கிய தோழர் இனியவனின் உரைப்பொழிவு......

இயேசு கிறித்து பிறந்தநாள்
எங்கட்கு விடுமுறை நாள்
நோன்புப் பெருநாள்
உழைப்போர்க்குக் கொண்டாட்ட நாள்
வெவ்வேறு மதப்பண்டிகைகள்- இங்கே
ஆர்ப்பாட்ட நாட்கள்.

சொத்துடைமை சிந்தனையின்
கறைபடிந்துபோன முதலாளிய
அடிமையமைப்பில்,
பேராசான் மார்க்சின் பிறந்தநாள்
வேலை நாள்.
இந்த இழிநிலை மாற்ற
நம் பணி முடுக்கம் ஆகட்டும்
என்ற விழைவோடு...
உரைவீச்சோடு முடிந்தது.

www.padippakam.com

## எழுபதைக் கடந்த தாடிக்காரன் ஃபிடல் எனும் மாவீரன்

அநியாய அமெரிக்காவுக்கு
அறை கூவல் விடுக்கும்
சோசலிச தூதனே!
கியூபா கண்ணீரில்
மூடு துணி வேண்டிய
"சே" தோழனின்
எச்சத்தை தேடிப் பெற்று
நினைவகம் அமைத்தவனே
எங்கடை தோழனே,
மாவீரனே; ஃபிடலே!...
எழுபதுக்கு அப்புறம்
இயங்கமாட்டாய் நீ- என்று
ஆருடம் சொன்னவர்கள்
வியப்பது! உம் ஆற்றலைக் கண்டு
அவனா துவங்கி சாந்தியாகோ
வரை நெடும் பயணம்- பின்னும்
மக்கள் சந்திப்பு, ஐந்து மணி
நேர உரைப் பொழிவு.
பெரியாரைக் காண்கின்றோம் உன்னில்
அறுபதுக்கும் மேற்பட்ட
கொலை முயற்சிகள்
தளர்ந்துவிடவில்லை நீ
ஆணையிட்டவர்கள்அடக்கமாகிவிட்டனர்
"என்றென்றும் வெற்றி"- நீ
கற்றுத் தந்த வரிகள்- அதுவே
நாங்கள் உயர்த்தும் பதாகைகள்
போராளிகள் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகின்றார்கள், என்ற
உம் கூற்று பொய்யில்லை,
அகிலம் கண்ட ஆசான்
காரல் மார்க்சு விழைந்த
நெறியில் நாங்கள்?.....

படிப்பகம்

www.padippakam.com



RM 1.00

## 'மே' நாள் என்னும் விழா

மடமை மிகுந்த மதத்தின் பெயராலும்
மாண்பு மறந்த மாமனிதர்க்கும்
எத்தனையெத்தனை விழா இவ்வுலகில்
அத்தனை கொண்டாட்டங்களும், நிகழ்வுகளும்
மனிதரைப் பிரித்தும் அழித்தும்
பரமனின் இருப்பிடத்திற்குப் பாதை காட்டும்
மனிதத்தன்மையற்ற மத அதிகாரிகளின்
பணம் குவிக்கும் விழா!

இந்த ஒருவிழா மட்டும்தான்
உழைப்பாள மக்களை
ஒன்றுபடுத்தியது உயர்வுபடுத்தியது
அந்த விழா "மே" நாளெனும்
பெருவிழா, மாந்தர்க்குப் பொதுவிழா

**மெரினா சதுக்க 'மே'நாள் கொண்டாட்டத்தில் படிக்கப் பட்ட உரைவீச்சு**

❀

## குணப்படுத்தும் மருந்து

நூறு மலர்கள் மலர்ந்த இயக்கம்
மாவோ தலைமையில்;
ஆயிரம் கருத்துகள் மோதின
பத்துப் பெரும் உறவைச் சொல்லி
மாபெரும் விவாதம் நடத்தியவரின்
நீண்ட பயண வரலாறு
நம்மைக் குணப்படுத்தும்
மருந்தாகும்
கற்றுத் தேர்ந்தால்.....!

**மலாக்கா நகரக் கலந்துரையாடலில் ஊர்சுற்றி உலகப்பன்**

படிப்பகம்